**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.258/2023**

**வா.சா.– 1– அமுதா,க/பெ.ஆரோக்கியதாஸ்**

**நாள். 29.04.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2,3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் எந்த ஊரில் எத்தனை வருடமாக நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்றால் கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் அருகில் புடையூர் கிராமத்தில் பிறந்தது முதல் 54 வருடங்களாக வசித்து வருகிறேன். ஆரோக்கியதாசை எப்போது எங்கு வைத்து பார்த்தேன் என்றால் 1983 ம்ஆண்டு BSNL அலுவலம், கடலூரில் வேலை பார்த்த போது பார்த்தேன். எப்படி எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டது என்றால் எங்கள் எதிர் வீட்டில் வசித்து வந்தார், அதனால் பழக்கமாகி காதலித்து 1985 ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டேன். 1984 ம் வருடம் முதல் எனக்கு பழக்கமாகும். மரிய அர்தர் முதல் மனைவிக்கு பிறந்தார் என்று யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் ஆரோக்கியதாஸ் சொல்லிதான் தெரியும். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, மரியஆர்தரும், ஜெசிந்தாமேரியும் அண்ணன் , தங்கை மட்டுமல்ல, இருவரும் சம்மந்திகள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. திருமணம் ஆன சிலமாதங்களிலேயே மரிய ஆர்தரின் மகளும் ஜெசிந்தா மேரியின் மகனும் பிரிந்து விட்டார்கள் என்றாலும் அது குறித்து ஜீவனாம்ச வழக்கு நிலுவையில் இருந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சமரச பேச்சு தோல்வியில் முடிந்து இருவரும் தீர்வாகாமல் இன்றும் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. மான்சி எலிசாவின் தாயார் ராணி கிருஷ்ணாமேரி இறந்த படியால் அனைத்து சொத்துக்களையும் அபகரிக்கும் நோக்கோடு ஆரோக்கியதாஸ் விவரங்களை சொல்லிக் கொடுத்து என்னை தூண்டி விட்டு வழக்கை தாக்கல் செய்ய வைத்துள்ளார் என்றால் அது பொய். தாவா எ சொத்தில் அசல் ஆவணங்களையும், வீட்டு வரி இரசீதுகளையும் மற்றும் மின்கட்டன இரசீதுகளையும் இன்னும் பிற நகல்களையும் மரியஆர்த்தர் மூலமாக எனக்கு கிடைத்து என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் 13 ம் பத்தியில் சொல்லியுள்ளவாறு 2020 ம் வருடம் டிசம்பர் மாதம் நான் திண்டுக்கல் வந்ததாக கூறும் 2 ம் வாதி ஸ்டெல்லாமேரி என்னுடன் வந்தாரா என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி ஜெசிந்தாமேரி ஆரோக்கியதாசின் சகோதரி யார் சொல்லி தெரியும் என்றால் என் கணவர் சொல்லியும், எனக்கும் தெரியும். 20 வது பத்தியில் சொல்லியுள்ளபடி வாரிசுகளின் விவரங்களும், தாவா சொத்தின் விவரங்களை மரியஆர்த்தர் காண்பித்தார் என்றால் காண்பித்தார், எனது கணவரின் தங்கை ஜெசிந்தா சொல்லிதான் தெரிய

வந்தது. 21 பத்தியில் சொல்லியுள்ளவாறு மரியஆர்தர், ஜெசிந்தாமேரியும் பொய் தகவல் கொடுத்து முழுசொத்தையும் அபகரிக்கும் நோக்கோடு தீர்ப்பாணை பெற்றார்கள் என்றாலும், தற்போது ஏன் எனக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க கட்டாயம் என்னவென்றால் மேற்படி நபர்கள் பொய்தான் சொல்கிறார்கள். ஏனெனில் மரியஆர்தர் முழு சொத்தையும் அபகரிக்கும் நோக்கோடு என்னுடன் கூட்டு சேர்ந்து 13 ஆண்டுகளாக சொத்துக்களை பிரிக்க விடாமல் தடை போட்டு வந்தார் என்றால் சரியல்ல. என் பிறந்த தேதி தெரியவில்லை, எனக்கு 54 வயதாகிறது. எனது ஆதார், வாக்காளர் அட்டையின் படி எனது பிறந்த தேதி 29.03.1970 என்றால் தெரியவில்லை. நான் இந்து மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். என் அப்பா பெயர் சுப்பிரமணி, அம்மா பெயர் தில்லியம்மாள் ஆகும். ஆரோக்கியதாஸ் ரோமன் கத்தோலிக்க மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் கூத்தாநல்லூரில் குடும்பத்துடன் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. கடலூரில் திருமணம் செய்து வசித்து வந்தேன். ஆரோக்கியதாசுக்கு கடந்த 20.04.1995 தேதியில் புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் விஜயகுமாரி ஜேக்கப் என்பவரை ஆர்சி முறைப்படி காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. அவர் பெண்வீட்டார் சம்மதத்துடனும் சகோதர, சகோதரிகள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தது மரிய ஆர்தர் என்றால் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் வேளாங்கண்ணி பேராலயத்தில் நான் எதுவும் ஆட்சேபணை செய்தேனா என்றால் இல்லை. அவர்கள் திருமணம் முடிந்து இருவரும் தூத்துக்குடியில் வாடகைக்கு குடியிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஆரோக்கியதாஸ், விஜயகுமாரி இருவரும் திருமணம் செய்து கொண்ட பிறகு அதை எதிர்த்து எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை, விஜயகுமாரி யார் என்றே எனக்கு தெரியாது. ஆரோக்கியதாஸ் மனைவி விஜயகுமாரியை நேரில் பார்த்து பேசியுள்ளேனா என்றால் இல்லை. நான் ஆரோக்கியதாசின் சொந்த ஊரான திண்டுக்கல் ஆரோக்கியமாதா தெருவுக்கு வந்ததுண்டா என்றால் வந்துள்ளேன். என் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. என் மகள் கிராம நிர்வாக அலுவலராக பதவி ஏற்றார் என்றால் 10 வருடம் இருக்கும், தற்போது அவர் R.I யாக இருக்கிறார். என் மகளின் திருமண பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மகளின் பிறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மகளின் பள்ளி மாற்றுச் சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2 வது வாதியின் தந்தை என்பதை நிரூபிக்க மேற்படி ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் நிரூபிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. ஆரோக்கியதாஸ் திருமணமாகி விஜயகுமாரி என்பவருடன் 1995 ல் திருமணமாகி 2003 வரையில் வசித்து வந்தார் என்றால் அவ்வாறு இல்லை. விஜயகுமாரி செவிலியராக உள்ளார் என்றாலும் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்றாலும் இல்லை.

ஆரோக்கியதாசுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என மருத்துவர் தெரிவித்தார்கள் என்றால் இல்லை. ஆரோக்கியதாசுக்கு 8 ஆண்டுகளாக குழந்தை பிறக்காததால் 2 வது வாதி பிறக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனக்கு 12.03.1985 ல் திருமணம் ஆனது என்றால் சரிதான். நான் குறிப்பிடும் 1985 ல் எனக்கு வயது 15 என்றால் சரிதான். அப்போதுதான் என் மகளை பெற்றேன் என்றால் சரிதான். நான் திருமணம் செய்து கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 4 ம் பத்தியில் சொல்லியபடி 1983 ல் ஆரோக்கியதாஸ் வேலை பார்த்து வந்ததாகவும், அந்த வருடத்தில் எனக்கு வயது 14 என்றால் சரிதான். 1958 ல் பிறந்த ஆரோக்கியதாஸ் 26 வயது மதிக்கத்தக்க ஒரு அரசு அதிகாரி 14 வயதுள்ள என்னை காதலித்தார் என்பது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் தேதியில் திருமணம் நடந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என் மகள் 1986 ல் எனது வீட்டில்தான். பிறந்தார். எனது மகள் பிறக்கும் போது எனது வயது 16 என்றால் சரிதான். நான் கர்ப்ப காலத்தில் மருத்துவமனையில் பரிசோதித்தேனா என்றால் இல்லை. என் திருமணம் யார் முன்பு எங்கே நடைபெற்றது என்றால் கடலூர் மாவட்டம், ஸ்ரீ முஷ்ணம் அருகில் புடையூர் கிராமத்தில் பெரியவர்கள் முன்பு நடந்தது. இதுகுறித்து ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆரோக்கியதாஸ் உண்மையில் என்னை திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆரோக்கியதாஸ் 1983 ம் ஆண்டு கடலூரில் வேலை செய்தார் என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு கடலூரிலிருந்து பணிமாற்றமாகி ஆரோக்கியதாஸ் கூத்தாநல்லூருக்கும் பின்னிட்டு தஞ்சாவூருக்கு சென்றதாக சொல்வது முற்றிலும் பொய் என்றால் சரியல்ல. 20.04.1995 ல் ஏற்படுத்திய ஆரோக்கியதாசின் திருமண பத்திரிக்கைதான் அதற்கு சான்று என்றால் சரியல்ல. 8 ம்பத்தியில் சொல்லியபடி வாதிகளை தன்னுடன் அழைத்து செல்லாமலும் செலவு தொகையை செலுத்தி வைக்காமலும் இருந்த நிலையில் சில நாட்களிலேயே அவர் தூத்துக்குடிக்கு பணிமாற்றம் செய்யப்பட்டதாக சொல்வது பொய் என்றால்சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN Digitally signed by SWARNAM J RAJAGOPALAN Date: 2026.04.29 22:10:27 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.